[1990 சனவரி 20

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயுள்ள ஏரி குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தனியாக ஒரு சட்டம் கொண்டுவர அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா? தமிழ் நாட்டிலுள்ள ஏரி குளங்களை மராமத்து செய்வதற்கு, வெளி நாட்டு நிதி நிறுவனங்கள் ஏதாவது உதவி செய்ய முன் வந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற ஏரிகளை ஆழப்படுத்த, அதனுடைய கரைகளை உயர்த்த, அதற்கு வேண் டிய கால்வாய்களை நவீன முறையில் அமைக்க, ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின்கீழ் உதவி பெற்று இரண்டு கட்டமாக அதற்குவேண்டிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து, அவ்வப்போது அரசு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதோடு பொது மக்களுடைய ஒத்துழைப்பும் அதற்குத் தேவைப்படுகிறது. சட் டத்தின் மூலமாகவே எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்று கருதக் கூடாது. மனமாற்றமும் தேவை.

10-05 மணி

ஈரோடு நகரத்தில் இரயில்வே நுழை பாலத்தை அகலப்படுத்துதல்.

*5294. திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்தில் பூந்துறை ரோட்டில் அமைந்துள்ள இரயில்வே நுழை பாலத்தை ஆழப் படுத்தி அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்போது இந்தத் திட்டத்தினை மேற்கொள்ள முன்வரும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அது முடிந்த பிறகு அந்தப் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து பல முக்கிய நகரங்களுக்குச் செல்கிற பாதையில் அந்தப் பாலம் இருக்கிறது. அதேபோல

ஈரோட்டுக்குள்ளே வரக்கூடிய முக்கிய விளை பொருட்களான மஞ்சள் போன்ற பொருட்களை பாரம் ஏற்றிக் கொண்டு லாரிகள் வருகின்ற பாதையாகவும் அந்தப் பாலம் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட லாரிகள் அந்தப் பாலத்தில் நுழையவும் போகவும் முடியாத நிலை இருப்பதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. அதேபோல, ஈரோட்டில் உள்ள மருத்துவமனைக்கும் வருகிற பாதையாக அது இருக்கிறது. கிராமப் புறங்களில் இருந்து வருகிற நோயாளிகளும், உயிருக்கு ஆபத்தான நிலையில் வருபவர்களும் அங்கே வரமுடியவில்லை. அதை மனதில் கொண்டு, உடனடியாக அந்தப் பாலத்தை விரிவு படுத்தவோ அல்லது மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை உருவாக்கவோ இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததுதான் அந்தப் பாலம் என்பதை அரசு உணர்ந்த காரணத்தால்தான், அந்தப் பாலத்தை அகலப்படுத்துவதற்காகவும், அதை மேம்பாலமாக மாற்றியமைக்கவும் இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. சுமார் 120 லட்ச ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு பொருளாதார ஆய்வு, போக்குவரத்து ஆய்வு போன்றவை நடத்தி, அதன் பிறகு ரயில்வே துறையிடமும் கலந்து பேசி, பின்னர் அந்தப் பணி எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளில் அரசு துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திருச்சி இராசாசி காசநோய் மருத்துவமனை.

*3260. திரு. அன்பில் பொய்யாமொழி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி இராசாசி காசநோய் மருத்துவமனையை செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனையுடன் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கில்லை.